Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

இந்துசாதனம்

விரோதி ஆவணி 28உ (1889) ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யீணையடி நீழலே.

[புத்-சுவ] யாழ்ப்பாணம்:- மன்மத வரு தை மீ கச உ வெள்ளிக்கிழமை (27 JAN. 1956) [இல-சுங]

அழித்து ஒழிக்கப்படுகின்றது தமிழகம்

வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் ஒன்றாக நிற்போம்

பதவி மயக்கத்தால் எமது அழிவுக்கு நாம் உதவியாயிருக்கக்கூடாது

நீதிபதி நாகலிங்கம் அவர்களின் பொருள் நிறைந்த உணர்ச்சி உரைகள்

தமிழ்மக்களின் ஐக்கிய முன்னணிக் கூட்டம் வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் இளைப்பாறுகின்ற நீதிபதி ஸ்ரீ சி. நாகலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வேறுபாடென்பது சிறிதுமில்லாது எல்லாக் கட்சியினரும் ஒன்றுகூடினர், யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, தமிழர் முஸ்லிம்கள் என்ற எண்ணங்கள் அகன்றன. அடிமைத்தளையை அறுத்துச் சுதந்திரத் தமிழ்நாடு அமைக்கவேண்டுமென்றும் எதிரில் வரும் சுதந்திர தினம் துக்கதினமாகக் கொண்டாடவேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் அவர்களுடன் திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், எ. எல். தம்பிஐயா, எ. எம் மெர்சா முதலிய பல தலைவர்கள் நாம்செய்ய வேண்டியவை எவை என விளக்கும் உணர்ச்சிதரும் உரைகளை வரையாது வாரிவழங்கினர்கள்.

தலைவர் அவர்கள் பேசும் போது:

"இலங்கைத் தமிழர் சரித்திரத்திலே இது சோதனையும் கவலையும் மிகுந்த ஒரு நெருக்கடியான நேரம். இதுமாதிரியானதொரு பாரதூரமான நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய நிலைமை தமிழ்மக்களுக்கு சென்றமுன்நூறாண்டு நூற்றாண்டுகளுக் கிடையில வேறு எப்பொழுதுமே ஏற்பட்டிருந்ததில்லை. இன்று தமிழர் சமூகம் முழுவதுமே அழிந்து ஒழிக்கப்படும் ஆபத்தான நிலைமையில தத்தளித்துக் கொண்டிருக்கிறது. தமிழர்களின் மொழியும் கலாசாரமும் நசுக்கப்படுகின்றன. தமிழர் வாழ்வு அழிந்துகொண்டிருக்கிறது. அவர்களது காணிகள் பிடுங்கப்படுகின்றன; அவர்கள் கௌரவத்துக்குப் பங்கமிழைக்கப்படுகிறது சுயமரியாதை தாக்கப்படுகிறது.

"எனவே தமிழ் மக்களின் மொழியையும், கலாசாரத்தையும் சுதந்திரத்தையும் காணி பூமிகளையும் பாதுகாப்பதற்காக உங்களுடைய பிரதிநிதிகளின் அழைப்பிற்கிணங்க நீங்கள் இங்கு திரண்டு வந்திருப்பதில் ஆச்சரியமில்லை. நமமை நோக்கியுள்ள ஆபத்து எவ்வளவு பாரதூரமானதென்பது முதலில் நன்கு உணர்ந்து கொள்ளப்படவேண்டும். தமிழர்களின் பழைய பெருமை வாய்ந்த சரித்திரத்தை நாம் இங்கு ஆராயத் தேவையில்லை. இந்நாட்டின் சுதந்திரம் ருசிப்பிட்ட ஒரு வகுப்பாரினுலை சம்பாதிக்கப்பட்ட தில்லையென்பதை மாத்திரம் நான் குறிப்பிட்டால் போதுமானது. ஆசியக்கீர்த்திருத்தம பெறுவதற்கு சிங்களவர், சோனகர், பறங்கியர், மலாய்க்காரர்கள் ஆகியவர்களைப்போலவே தமிழர்களும் அரும்பெரும் தியாகங்களைச் செய்தார்கள்.

ஆனல் துரதிர்ஷ்டவசமாக இரண்டு இலவாக ஆளும் கட்சி தர்மத்தையும் நியாயத்தையும் தூர ஒதுக்கி வைத்துவிட்டது. இந்நாட்டு நிர்வாகத்தில் தமிழ்மொழிக்கு இடமில்லையென்று அதாவது இந்நாட்டு ஆசியலில் தமிழர்களுக்கு இடமில்லை யென்று அவர்கள் கொஞ்சமும் கூசாமல் பச்சையாகச் சொல்லிவிட்டார்கள். அதாவது இந்நாட்டில் தமிழ் பேசுவோர் இல்லையென்றும் தமிழ்க் கலாசாரம் இல்லையென்றும் தமிழர்களும் சோனகர்களும் இலங்கையெனறும் சிங்களவர்களுக்கு மட்டுமே இந்நாடு தலைமுறை தலைமுறையாகச் சொந்தமென்றும் செலவுவதைபோல தமிழ் மொழியை ஒதுக்கி விட்டார்கள். ஆதலால் நாட்டு தமிழ்மக்கள் சொந்த பாஷையும் சொந்தப் பூமியும் சொந்த கலாசாரமும் இல்லாமல நடுத்தரப் பாஷைபோன்றைப் பேசும் மக்களைப்போல ஆளும் கட்சியினதுவிட்டது. பனனெடுங் காலமாக அவர்களோடு சமமும் இந்நாட்டில் சேர்ந்து வசிப்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். கதிர்காமம், திருக்கேதீச்வரம், திருக்கோணேஸ்வரம், நைனாதீவு, நாகம்மாள்கோவில், நாகதீபம் முதலியவைகளே பல நூறாண்டுகளாக இந்நாடு தமிழர் ஆட்சியிலிருந்து வந்ததற்கு அசைக்கமுடியாத அத்தாட்சிகளாகும். சிங்களவர்களோடு தோளோடு தோள் சேர்ந்து நாம் போராடியிருக்கிறோம், சிங்களவர்களைக்காவும் நாம் போராடியிருக்கிறோம். இதையெல்லாம் ஆளும் கட்சியினர் அறவேமறந்துவிட்டார்கள். இன்று "நீங்கள் யார்?;" என்று நம்மைக் கேட்பதைப்போல அவர்கள் நடந்துகொள்ளுவதை கேவலமான "நன்றிகெட்ட தனம்" என்று சொல்லவே தோன்றுகிறது. ஆனல் இன்று ஆத்திரப்படுவதற்கு இடமில்லை. அவர்கள் தங்கள் என்ன சொல்லுகிறோம் என்ன செய்கிறோம் என்று விளங்காமல நடந்துகொள்ளுவதற்காக அவர்களிடம் நாம் பச்சாதாபப்படுகிறோம்.

இவர்களிடம் பச்சாதாபப்படும் நாம் இன்றைய நிலைமையில் நமது பிற்காலச் சந்ததியார்களுக்கு செய்யவேண்டிய கடமையை மறந்துவிடமுடியாது.

ஆகையால் ஒவ்வொரு உண்மையான தமிழருடம், முஸ்லிமும் கச்சையை இழுத்துக் கட்டிக்கொண்டு இக்கரட்டில் தொடர்ந்தும் சமாதானமாகவும் கௌரவமாகவும் சுயமரியாதையுடனும் வாழ ஒருவழியைக் கண்டுபிடிக்க ஒவ்வொருவரும் இயன்றதைச் செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது.

மந்திரி பதவிகள், ஸ்தானீகர் பதவிகளை வழங்குவதாக ஆசை காட்டுவதில் நாம் மயங்கிவிடக்கூடாது. தனிப்பட்ட முறையில் அவிக்குப இலாபங்களும் கௌரவங்க

தொடர்ச்சி 6-ம் பக்கம்

தமிழ் இராச்சியம் சாத்தியமல்ல

மாத்தறையில் கடந்த ஒரு கூட்டத்தில் சேர். ஜோன் கொத்தலாவல பேசும்போது இந்த நாடு பிரிவினை செய்யக் கூடியதல்ல தமிழ் நாடு வேண்டுமென்றால் தமிழர் படையெடுத்தே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குப் பெற்றே தமிழ் ஸ்டேட்டைப் பெறவேண்டும். இந்த இரு முறைகளும் சாத்தியமாக மாட்டா என்று கூறினராம்.

குன்றக்குடி அடிகளின் உண்ணாவிரதம்

தமிழ் இராச்சியத்தின் ஓர் பகுதியாய் தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை என்னும் இடங்கள் அமையவேண்டும் என்று வாதாடுகின்றார் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானசிர மணியார். அவருக்கு வாழ்த்துரை அனுப்பிவிட்டு அக்குறிக்கோள் வெற்றிபெறும் பொருட்டு குன்றக்குடி அடிகளார் இருபத்தொருநாள் உண்ணாவிரதம் இருக்கப்போகின்றார்.

அரசியலில்

அரங்கில் ஒருங்கு சேர்ந்து அகத்தில் பிரிந்துவிடல்!

உரிமைப் போராட்டத்தின் உயர்ந்த பண்பாடு!!

கூட்டங் கூடுங் கொண்டாட்டம்.....?

'குழந்தைப்பிள்ளைக்கு விளையாட்டு — சுண்டெலிக்குச் சிவமோசம்' என்ற விதமாகத் தமிழகதத்தைக் காப்பாற்றும் பொறுப்பைத் தாமாகவே சுமந்துகொண்ட தலைவர்கள் பொழுது போக்குகின்றார்கள்?

நாழ்ப்பாணத்திலே வழக்கறிஞர்கள் அமைத்த மாநாட்டிலே இந்தத் தலைவர்கள் பல நாழிகைப் பொழுது சொற் பெருக்கினர்கள். கூட்டமுடிவு அப்பேச்சுக் கேட்டவர்களுக்குதான் தெரியும்.

மறுபடி வெள்ளவத்தையிலே தோன்றினர்கள். பினனரும் பேச்சுங்கழ்ச்சி நடந்தது. சில யோசனைகள் செய்யப்பட்டன. ஒற்றுமைக் கோலம் உருவானதுபோல அறிக்கையிருந்தது. தமிழகத்தினர் சிறிது தெளிந்த நேரமும் பெற முன்னரே பிரிவினை அறிவித்தல் பிறந்துவிட்டது.

இந்த வேடிக்கை விபரீதங்கள் எதற்காக விளைவிக்கப்படுகின்றன? தமிழ் பேசும்மக்கள் கவலை கவலையாயிருக்கத் தலைவர்கள் கூடுவதும் — பிரிவதும் ஆகக் கூத்தாடுவதென்றால் உலகம் என்னதான் உரைக்கமாட்டாது?

கட்சிகள் எல்லாம் தமிழகத்தாருக்குத் தொண்டாற்றுவதாகச் சொல்லுகின்றார்கள். ஒருவழியாக அத் தொண்டினைச் செய்யுங்கள் என்றால் இது எங்கள் கொள்கை. இது எங்கள் கொள்கை என்றதத் தங் கொள்கைகளே வேண்டுமென்றாற்றி மலைகின்றார்கள் மற்றையோரையும் மலைவிக்கின்றார்கள்.

பாரதநாட்டைப்பிரிக்கப்படாது என்று உறுதி மொழி கூறினர் காந்தியடிகள். நேருப் பெரியாரும் ஏனையோரும் அக் கொள்கையிலேயே நின்று போராடினர். ஆனல் ஈற்றிலே பாகிஸ்தானம் பிரிவிடப்படுவதன்றி வேறு வழியில்லையென்று கண்டவுடன் கொள்கையை மாற்றிப் பிரிவிடற் கருமத்தில் ஈடுபட்டார்கள். இது கொள்கை மாற்றமா.....? பாரதத் தேசத் தொண்டர்களிலிட பாரில்வேறு நேர்மை மிக்க பரோபகாரிகள் இருக்கின்றார்களா?

தமிழகத்தின் கவலைக்கிடமான நிலைமைக்கு இப் பொழுது வேண்டியது எதிர்ப்பு இயக்கத்தை நடத்து

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருசிற்றம்பலம்.
வாழ்கஅந்தணர்வானவர் ஆனினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனுமமே
சூழ்கலையகமுத்தமிழ்தீர்கவே
திருசிற்றம்பலம்

இந்துசாதனம்

வாழ். மன்மத ஞ தைமீ
கச ஈ வெள்ளிக்கிழமை

இனிச் செய்ய வேண்டியது என்ன?

பாராளுமன்றத்திற் கூறப்பட வேண்டிய தெல்லாம் தமிழ் பேசும் அங்கத்தவர்கள் பன்முறையும் சீராகச் சொல்லிவிட்டார்கள். அமைச்சர்கள் அவையிலும் அவற்றை எடுத்துக் காட்டி விட்டார்கள். 'ஈ இருக்கும் இடமெனினும் இனிக்கொடுக்கமாட்டோம்' என்று அந்த நூற்றொருவர் சபை மேற்பார்வையாளர் சொல்லாமற் சொல்லி விட்டார்கள். அவ்வளவில் நிலைமை நின்றுவிடவில்லை. தென்னிலங்கை மக்களும் புத்த குருமார்களும் நல்லெண்ணத்திற்கோ நல்ல முடிபுக்கோ இடமில்லாத வகையிலே இறுமாப்புக் கொண்டெழுந்து விட்டனர். இந்த நிலைமையிலே தமிழ்பேசும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஆதிக்கக் கட்சித் தொடர்பையும் அமைச்சவைப் பதவியையும்விட்டகன்றனர். ஆனால் இவ்வளவிலே நிலைமை எவ்வாறு குணமடைந்திருக்கின்றது என்று பொது மக்கள் கேட்கின்றார்கள், இனிச் செய்யவேண்டியது என்ன என்று எதிர்பார்க்கின்றார்கள்.

பாராளுமன்றத்துக்கு மறுபடியும் புகுவதான அரசியற்றெண்டு என்று சிலர் இன்னமுங்கருதுகின்றார்கள். உள்ளதால் உள்ள அளவும் ஒத்துழைத்து விட்டு ஒன்றுமே ஒரு சுகமும் காணுத அங்கத்தவர்கள் அலமந்து நிற்பதை உண்மையில் ஆராய்ந்து பார்க்கும் அறிஞர்கள் மன்றதை நாடமாட்டார்கள் — தேர்தலைத் தேடமாட்டார்கள். அடையாள எதிர்ப்பாக யாராவது பாராளுமன்றத்தில் இருப்பது அவசியம் என்றால் அங்கே தலைவர்கள் புகுதல் வேண்டியதில்லையே வாக்காளர்களிலே ஒருவரைத் திருவுளச் சீட்டுப் போட்டுத் தெரிந்து அனுப்புதல் முறையாகாதா? அவ்வளவிலே தேர்தற்போராட்டத்தைச் சமாளித்துவிட்டாலும் பின் என்ன செய்வது என்று மக்கள் அறிதல் வேண்டும்.

காந்தியடிகள் காட்டிய ஆத்மசக்திப் போராட்டத்தை நடத்துவதற்கு மக்கள் பயிற்சி பெறுதல் வேண்டும். உண்மை ஒழுக்கம் நேர்மை நிதானம் முதலியன அமைந்த குணசீலர்கள் இந்த எதிர்ப்பு இயக்கத்திலே பொருளையும் பொழுதையும் செலவு செய்வதற்கு ஆயத்தம் ஆகுதல் வேண்டும். பங்கரப் புரட்சி மனப்பான்மையுள்ளவர்கள் இந்த நிலைமையைத் தங்கள் சொந்தக் காரியானுகூலத்துக்காகப் பயன்படுத்த முன்வருவார்கள். ஆகையினால் சத்தியசோதனைப் போராட்டம் சீர்குலைந்து பலாத்காரமாக மாறிவிடக்கூடாத வகையிலே காப்பாற்றப்படுவதற்குத் தொண்டர் படை பழகுதல் வேண்டும். இவ்வாறுகச் செய்யப்படவேண்டியன பல இருக்கவும் தமிழ் நாடா கூட்டாட்சியா என்று கொள்கை வாதாட்டத்திலேகாலத்தை அவமே கழிக்கின்றவர்கள் தேசத் தொண்டர்களா சுயநலவாதிகளா என்று கேட்கிறோம். மாற்றார் அறிந்து மனமகிழக்கூடிய வகையிலே மேடையிலேமேறிக் கொள்கை வேறுபாடுகளை ஆணிவேறு அக்கு வேறாக எடுத்துக்காட்டி ஒற்றுமையைக் குலைத்து வருகின்றவர்களா சத்தியாகிரகப் போராட்டம் நடத்தித்தமிழ் நாடும் கூட்டாட்சியும் பெறக்கூடியவர்கள்?

○

வாழ்க பாரதக்குடியரசு

—0—

ஆத்ம சத்தியின்போராற்றலை அறிவிக்கும் அரசியல் நிகழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளக்கும் பாரதநாட்டின் பண்பாடே உலகத்தில் அமைதியை நிலவச் செய்வதற்கு ஒரேஒரு இலட்சியம் என்பது அநுபவம் வாய்ந்த அறிஞர்கள் கூற்று. தைத்திங்களிலே உதயமாகிய பாரதக் குடியரசின் ஆரும் நூற்றாண்டு விழா மனித குலத்துக்கு ஒரு புத்துணர்ச்சியைக் கொடுக்கும் வகையிலே அமைந்துள்ளது. ஐக்கிய நாட்டுத் தாபனத்திலே பல ஆண்டுகளாகவேற்றுமைப் பட்டுப் புது அங்கத்தவர்கள் சேர்வதற்குத் தடையாயிருந்த விபரீதங்களை விலக்குவதில் இந்திய நாடு அயராதுழைத்தமையும் அதன் பயனாக இன்று ஐ. நா. மதிப்புப் பெற்றிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கன. உண்மை நெறியே ஒழுக்கநெறி என்ற உயர்ந்த பண்பாட்டில் இறைகிணைவை மறவாது வாழ்ந்துகாட்டிய காந்தியடிகளின் சீடர்களாகிய கலாகித இராசேந்திர பிரசாத்து, நேருப் பெரியார் போன்ற குணசீலர்களின் பொறுப்புணர்ச்சித் தொண்டிலமைந்த பாரத நாடு மாநிலத்துக்கு ஒரு மணிவிளக்கை வைத்துள்ளது. வாழ்க பாரதநாடு.

சைவப்பெரியார் ஸ்ரீ பொன்னையா அவர்கள் நினைவு நாள்

இப்பெருமகனார் ஏழாலை மென்னு மூரிலே சைவ வேளாளர் குறத்தில் பிறந்தனர். இவரது தந்தையார் பிரபல சுதேச வைத்திய சிகாமணியாக விளங்கிய நிரு. ஐயம்பிள்ளை அவர்களாவர். இவர் உரிய காலத்தில் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று தமதூரின் கண்ணே சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களால் நாபிக்கப்பட்ட சைவவித்தியாசாலையில் கல்வி கற்றனர். அப் பாடசாலைக்கு ஆசிரியராகக் கடமையாற்றிய சுன்னாக்கமாரசுவாமிப் புலவரிடத்தும் நிகண்டு முதலிய இலக்கியங்களையுங்கற்றுத் தெளிந்தனர். பின் ஆங்கிலக்கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள ஒரு கிறீஸ்தவபாடசாலையொன்றில் ஆங்கிலக்கல்வியையும் பயின்றார். அத்துடன் சம்ஸ்கிருதமும் கற்றுத் தெளிந்தார். இதனால் இவர் மூன்று பாஷைகளிலும் பாண்டித்திய முடையவரானார். அதன்பின் தந்தையார்பால் வைத்தியக் கல்வி முறைகளையும் கற்று வைத்திய திலகராகவும் விளங்கினார். இதனால் இவரை ஊரார் பரியாரியார் பொன்னையாபிள்ளை யென அழைத்தனர்.

இளமையிலேயே தூறவுள்ளமும் அடியார் பக்தியும் வாய்ந்தவர். இதனால் இவர் சிவவேடம் பூண்ட சிவனடியார்களைக் கண்டால் பக்தி சிரத்தையோடு வணங்குவர்.

இவர் தம்வாழ்நாளில் ஒரு சிவனடியாரைத் தம தில்லத்திலிருத்தி உபசரித்தவர்கள். அதன்பின் வேதாந்த உபகிடதங்களையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் கற்றுத் தெளிந்தனர். சித்தாந்தக் கருத்துக்களை மாருகபார் எழுதினாலும் பேசினாலும் உடனே அதற்கு மறுப்பு எழுதிப் புத்தி புகட்டுவர்.

இந்தியாவுக்குப் பலமுறையும் யாத்திரைசெய்து சிதம்பரத்தில் சிலகாலம் இருந்து நடேசரைத் தரிசித்தவர். பல பெரியோர்களின் மதிப்பையும் பெற்றவர். சிதம்பரத்தில் இருக்குங் காலத்தில் ஸ்ரீலஸ்ரீ செப்பறைச் சுவாமிகளின் நட்பையும் பெற்றவர்கள். சிவஸ்ரீ காசிவாசி செந்திநாதையரவர்களைத் திருப்பரங்குன்றம் சென்று தரிசித்தவர். யாழ்ப்பாணத்திலும் பிரபல மிராசுதாரராகிய தெல்லிப்பழை திரு. க. தம்பையா, வித்துவான் சிவஸ்ரீ சிவானந்தையர் இவர்களுடன் மிகவும் நட்புரிமை பூண்டொழுகினார்.

இவர் சைவத்தைவளர்ப்பதற்காகப் பல பெரியோர்களின் உதவியுடன் ஏழாலையில் ஒரு திருமடம் தாபித்தனர். அந்த மடம் இன்றும் நடைபெற்றுவருகின்றது. சைவப் பிள்ளைகள் பொருட்டு ஒரு சைவப் பாடசாலையையும் மடத்துக் கண்மையில் நிறுவி அதனையும் நடைபெறச் செய்தனர். சிவஞான சித்தியார் பாடவகுப்புகளைத் தமதுரிலும் பிறவூரிலுமாக வைத்து நடாத்திப் பல மாணவருக்கும் சித்தாந்த பாடம் சொன்னவர்கள். இதனால் இவருக்கு பல மாணவர்கள் பல கிராமங்களிலும் இருக்கிறார்கள். அவர்களிற் சிலர் இவரைக் குருவாகவும் கொள்கின்றனர்.

பல இடங்களிலும் சமயச் சொற்பொழிகள் செய்தவர்கள். உபகிடதங்களைத் தமிழில் மொழிபெயர்த்து இந்துசாதனத்தில் வெளியிட்டவர்கள். பல வைத்திய நூல்களைப் பதிப்பித்தவர்கள் — அச்சுக்கூடம் தாபித்து — கலாவல்லி எனும் சைவப் பத்திரிகையை நல்ல முறையில் வெளியிட்டவர். திருமடங்களில் அன்னதானம் செய்தவர்கள்; இந்த வகையில் பல தொண்டுகள்செய்துள்ளார்கள் — இன்னும் இப்பெரியார் சிவபரம்பொருளுக்குச் சாத்திய ஆங்காரகுகி என விரும்பித் திருவாவடுதுறையாதீன சந்நியாசிகளின் மணிவிளக்கென மிளிரும் மாதவச் சிவஞான சுவாமிகளின் உரைநடையில் வேதாகமங்களின் முக்கிய பகுதிகளுக்கு உரை வகுத்துள்ளார்கள். அவை இப்போது திரு மு. ஞானப்பிரகாசம் அவர்களிடத்தில் இருக்கிறதாக நம்புகிறோம். மேற்படியாரிடத்துள்ளதும் சிவபெருமானுக்குச் சாத்திய வரடாகறுமணமாலைகளுமாகிய இவ்வுரை திருவருளின் துணைகொண்டு விரைவில் வெளிவரும் என நம்புகிறோம்.

பொதுவாக இப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பெருமானைப்போல் சைவத்தின உருவெனத் திகழ்ந்த பல்லாண்டு சைவம் வளர்த்தவர். சைவத்துக்காக வேதம் வாலுனைச் செலவிட்டுக் கத்தாலிக்க குருமாரோடும் எதிர்த்துப் போராடி ஏழாலையில ஒரு சைவமகாசனவித்தியாசாலையையும் தாபித்தவர். இத்தகைய

தென்மயிலை
நா. செ. கோவிந்தசாமி

எங்கள் அறிவித்தல்

இன்று தைமீ 14-க ஈ (27—1—56) வெள்ளிக்கிழமை சைவப் பிரகாச யந்திரசாலையும் இந்துசாதனக்காரியாலயமும் தைப்பூசத் திருநாளின் பொருட்டு மூடப்பட்டிருக்கும என்பது அன்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

அதிபர்

சேர். கந்தையாவின் கருத்து

சேர். கந்தையா வைத்திய நாதன் மன்னாரில் வரவேற்புக் கூட்டம் ஒன்றில்பேசும்போது தாம் மூப்பத்தமூன்று ஆண்டுகள் அரசாங்க சேவையில் அமர்ந்திருந்து தமிழ் மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவையில் எப்பெருதாயினும் தவறியதில்லை என்றும், தான் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ளவரல்ல என்றும் சுயேச்சைபாகவே அமைச்சர் பதவியை ஏற்றிருந்தும், அரசாங்கம் தமிழ் மக்களுக்கோ, அவர்களின் மொழிக்கோ மதத்துக்கோ பாதகமானது எதையும் செய்தால் தாம அதை விட்டு நீங்குவதாகவும் கூறினர்.

குருபூசைகள்

சண்டேசுரநாயனார்

தேதி: தைமீ கஅ ஈ (31 1-56) செவ்வாய்க்கிழமை
இடம்: சபை நாவலர் மண்டபம் நிகழ்ச்சிகள்
இரவு 630—7 கடவுளாராதனை தமிழ்மறையோதல்
ஸ்ரீமத் தி.கலியாணசுந்தரக்குருக்கள் 7—8 'சண்டேசர நாயனார்' என்னும் பொருள்பற்றிப்பிரசங்கம்.
பண்டிதர் வ மு. இரத்தினேசர ஐயர்

நாயனார்

தேதி: தைமீ 25 ஈ (4-2-56) சனிக்கிழமை.
இடம்: சபை நாவலர்மண்டபம்.
இரவு 6½—7 கடவுளாராதனை, நாயனார் திருப்பாடல்களை ஓதுதல்.
திரு. சி. தருமலிங்கம் "நாயனார்" என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம்.
திரு. பொ அப்புக்குட்டி.

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக,

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவ பரிபாலனசபை
யாழ்ப்பாணம்
25-1 56.

இவர் தம வொழுக்கம் பூண்ட சன்மார்க்க சீலராய் வாழ்ந்து இற்றைக்குச் சில வருடங்கட்கு முன் இறைபதம் எய்தினர். இவரது அருஷாப்திய திருநாள் தைமீ உத்திர நட்சத்திரமாகும். அன்றைய தினம் அகில இலங்கைச் சிவனடியார் சங்கம் இவர் கிணைவைக் குறித்து ஏழாலைத் திருமடதில் மகேஸ்வர பூசை சைவச்சொற்பொழிவுகள் முதலியன செய்து எமபெருமானை வாழ்த்தி அஞ்சலி செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்பில் சம உரிமைத் திருத்தம்

இலங்கை அரசியலமைப்பில் இலங்கை மக்கள் யாவருக்கும் எவ்வித வேறுபாடும் எத்துறையிலும் இருக்க மாட்டாத நிலைமையைத் தரக்கூடிய திருத்தமொன்றைச் செய்ய வேண்டும் என்று அரசாங்கக் கட்சித் தமிழ் அங்கத்தவர் கூட்டமொன்றில் தீர்மானிக்கப் பட்டது. அவ்வித ஒழுங்கு இந்திய அரசியலமைப்புடன் அமெரிக்க அரசியலமைப்பிலுமே உள்ளதென்று அமைச்சர் ஸ்ரீ சு. நடேசன் அவர்கள் எடுத்துக் காட்டினர். ஐக்கிய தேசியக் கட்சி உபசபையிலே இக்கொள்கை சமர்ப்பித்து வற்புறுத்தப்படுமென்று அறியவருகின்றது.

தமிழ் மக்களுக்கு ஒரேஒரு கட்சி

தமிழர் மகாநாட்டார் தமிழரசுக் கட்சியார், சுயேச்சையாளர் ஆகிய யாவரும் வருகிற தேர்தலில் ஒரு கட்சியினராய் நின்று போட்டியிடும் வழி ஒன்று ஆராயப்படுகின்றதாம். கட்சி வேறுபாட்டை நீக்கும் நினைவுமே உதித்து விட்டதாம்.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

நிழலை விளக்கும் விஞ்ஞானம் பொருளை விளக்கும் மெய்ஞ்ஞானம்

அண்டகோடிகளெல்லாம் ஒடுங்கித் தோன்றும் அற்புதக் காட்சி

அமெரிக்காவில் காலிபோர்னியாப் பகுதியில் மௌண்ட் வில்சன் என்ற ஒரு இடமிருக்கிறது. அங்கே வான நூலாராய்ச்சி நிறப்பொடு நடைபெறுமாறு பெரியதொரு தொலைவுக் கண்ணாடி வைக்கப் பட்டிருக்கிறது. கண்ணாடியின் குறுக்களவு நூறு அங்குலமாகும். உலகத்திலேயே மிகப் பெரிய தொலைவுக் காட்சிக் கருவி இதுவே ஆகும். இத்தக் கண்ணாடியின் உதவியால் வானகவெளியினை ஆராய்ந்து விஞ்ஞானிகள் பற்பல புதுமைகளைக் கண்டவண்ணமாயிருக்கின்றனர்.

நாமிருக்கும் உலகம் உருண்டை; எவ்வளவோ பெரியது. 8000 மைல் குறுக்களவு கொண்டது. தன்னில் நாலிலொரு பங்கு குறுக்களவு கொண்ட சந்திரன் உபக்கிரகமாகக் கொண்டு வலம்வரும் பெருமையுடையது. ஆயினும் பூமியினும் பத்து இலட்சம் மடங்கு பருத்தது சூரியன்; மூன்று இலட்சம் மடங்கு கனம் மிகுந்தது 2 (இரண்டு) என்ற இலக்கமிட்டு அதன்பின் 27 சுன்னங்களிட்டால் வரும் தொகை எதுவோ, அத்தனை தொகைகள் பூமியின் நிறை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது அதாவது 20 இலட்சம் கோடி, கோடி, கோடி தொகைகள். 109 பூவுருண்டைகளைப் பரப்பி வைத்தால் ஒரு சூரியனின் குறுக்களவாகும்.

சூரியனைச் சுற்றி ஒன்பது கிரகங்கள் வலம் வருகின்றன. இவைகள் தங்கள் அச்சுக்களிலே சுழன்றுகொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றன.

இன்றைய வானநூல் கண்டுள்ள நவக்கிரகங்கள், நமது சோதிடநூல் கண்ட நவக்கிரகங்களிலும் சற்று வேறுபட்டிருக்கின்றன. சந்திரனே, பூமியைச் சுற்றி வரும் உபக்கிரகமாகவே கொள்வதல்லாது, தனிக்கிரகமாக இன்று கொள்வதில்லை. இராகு கேதுக்களுண்டு கோளங்களாக, நம்மவர் அவற்றைச் சாயாக்கிரகங்கள் எனக்கொண்டனர். உண்மையில் அவைகள் சாயைகளே; கிரகங்களாகா. ஆனால் இவற்றிற்குப் பதிலாக இப்பொழுது யுரானஸ், நெப்டியூன், புளூட்டோ என மூன்று புதுகிரகங்கள் தென்பட்டிருக்கின்றன.

சூரியனுக்கு மிக அடுத்திருக்கும் கிரகம் புதன்; மிகச் சமீபமிலிருப்பது புளூட்டோ, அதன் பின்னே பால்வெளி பின்னே மற்றொரு சூரியன்; மற்றொரு அண்டம்; மற்றொரு பால்வெளி. இங்ஙனமாக எண்ணில் கோடி சூரியர்கள்; அண்டங்கள்; பால்வெளிகள் பெருவெளிப் பரப்பிலே சுழல்கின்றன.

சூரியனுக்கு மிக அண்மையிலிருக்கும் புதன் கிரகத்திலெலலாம் சிறியது. மிக அணித்தது என்றால் சூரியனிலிருந்து 3 இலட்சம் மைலுக்கு அப்பாலிருப்பது. தானை ஒருமுறை தன் அச்சில் சுழன்று வருவதற்குப் புதனுக்கு 88 நாட்களாகின்றன. சூரியனை வலம் வருவதற்கும் 88 நாட்கள் ஆகின்றன. எனவே புதனிலே ஒரு முகத்தில் எப்பொழுதும் பகலின் ஒளி பொலிகின்றது; மற்றைய முகத்தில் எப்பொழுதுமே இரவின் இருள் படர்ந்திருக்கின்றது.

புதனுக்கும் பூமிக்கும் இடையே சுக்கிரன் காளமிருக்கின்றது. சுக்கிரன் ஏறக்குறைய பூமியின் அளவாகவே இருக்கின்றது. வெள்ளி எனப்படும் இக்கோள் தன்னையே ஒருமுறை சுற்றிக் கொள்ள மூன்று நாட்களாகின்றன. சூரியனை ஒருமுறை வலம்வர 455 நாட்களாகின்றன. சூரியனிலிருந்து சுக்கிரன் ஏறக்

தொடர்ச்சி 4ம் பக்கம்

திருக்கேதீஸ்வரம் நாவலர் மடம்

நிகழும் தை மாதம் 7-ந் திகதி (20-1-56) வெள்ளிக் கிழமை காலை 9 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில் திருக்கேதீச்சரம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் திருமடத்தின் நிலையான கட்டிட அத்திபாரம் இடும் விழா சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும் என்று அறியவருகின்றது.

வாழ்க்கைப் பண்பாடு

சமய ஆதாரமுடையதே சிறந்தது

நாகரீகமென்பது என்ன இன்றைய மக்கட்குத் தெரியாது என்றுதான் கூற வேண்டும். தெரிந்திருந்தால் மக்களிடையே அமைதியின்மை, ஒற்றுமையின்மை, பொறாமை ஆதிய கெட்ட பண்புகள் தாண்டவமாடத் தலைப்பட முடியாது.

உண்மை நாகரீகம் அல்லது பண்பாடு எது என்று சிலர் வினவலாம். உண்மை நாகரீகம் சமய சீலங்களினின்றும் மக்களிடமுதிக்க வேண்டிய தொன்று. மூலாதாரச் சமய சீலங்களினின்றும் உருவாகாத நாகரீகங்கள் போலி நாகரீகங்கள் போலி நாகரீகங்களை உண்மை நாகரீகங்களல்ல.

நாகரீகத்தை விஞ்ஞான உலகிற்கும் சமய உலகிற்கு மென இரு கூறுகப் பாகுபடுத்தலாம். விஞ்ஞானத்தின் அடிப்படையினின்றும் உண்டாக்கும நாகரீகம்மாக்கள்மக்களாகமாறுவதற்கு உதவும். வாழ்வாகு வாழவும், சமூகம் சிறந்து முன்னேற்றமடையவும், உறுதிப்பயனைத் தரவும், வல்லது சமயம் ஆதலால் சமயத்தினடிப்படையினின்றும் தோன்றும் நாகரீகங்களை மக்கள் மேற்கொள்ள வேண்டும். அதுவே சமுதாய விமோசனத்திற்குவகந்தது.

விஞ்ஞானத்திற்கும், சமயத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது ஆராய்ச்சி அறிஞர்கள் கண்ட உண்மை. விஞ்ஞானத்தையும் சமயத்தையும் வேறு வேறாகப் பிரித்ததலற்றுன்

....

செல்வி த. மாலோகமணி
காவேட்டி மிழக்து

....

இன்று உலகம் அழிவுப் பாதையை நோக்கி விரைந்து செல்கின்றது. சமயத்தின் அடிப்படையில் விஞ்ஞானத்தை மக்கள் பிரயோகிப்பின் அழிவு உண்டாகாது. சமயத்தைத் தவிர்த்து விஞ்ஞானத்தைப் பிரயோகிப்பின் அழிவுண்டாகுமென்பது உறுதி.

விஞ்ஞானத்தில் மூழ்கி மமதை கொண்ட மேல் நாட்டு விஞ்ஞான உலகின் நாகரீகங்களையே நாகரீகங்களெனப் பின்பற்றியபடியாற்றான் இன்று எமநாட்டு மக்களும் நிலைதளம்பி அல்லற்பட்டு அழிவை நோக்கி விரைந்து செல்கின்றனர்.

இன்று விஞ்ஞான உலகம் கண்டு பிடித்திருக்கும் அத்தனையையும் இறைக்குப் பல்லாயிரம் ஆண்டு கட்குமுன்பே கிழைத்தேச மக்கள் கண்டு பிடித்திருக்கின்றனர் என்பது பண்டை இலக்கிய, இதிகாச வரலாறுகளாலறியக்கிடக்கின்றது. அத்தகைய விஞ்ஞான முறைகளை அறிந்தும் அவர்கள் அவைகளை இன்றைய விஞ்ஞானிகளைப்போல விருத்தி செய்யவில்லை. ஏனெனில் சமயத்தை விட்ட விஞ்ஞானத்தை உண்மையான நாகரீகமல்ல என அவர்கள் கருதியதனாலேயாகும்.

நம்நாட்டார் மேல் நாட்டாரை விஞ்ஞானக் கொள்கையை விட்டு இயற்கையான ஆத்மஞான முறையிற் காரியங்களைச் சாதிக்கின்றமையாலன்றுன் மேல் நாட்டாரின் விஞ்ஞான ஆகம ஞானத்திற்குமுன எதிர்நிற்கவியலாது தோல்வியுறுகின்றது. சமயநெறி நின்று ஆத்மஞான முறையில் மக்கள் வெற்றியீட்டுவதும் உயர்ச்சியடைவதுதான் உண்மையான நாகரீகம். ஏனையவை அநாகரிகமான போலிகள்.

மேல்நாட்டு அநாகரீகங்களை நம்நாட்டு மக்கள் அறவேயகற்றி நம் நாட்டு நாகரீகங்களையே மேற்கொள்ளவேண்டியது இப்பொழுது அவசியமாகின்றது.

அருள்நெறித் தொண்டுக்கு நீர்வேலி இளைஞர்

ஏனையோரும் அவ்வழி ஏகுமாறு அழைப்பு

சென்ற ஒக்டோபர் மாதத்தில் தவப்பெருந்திருகுன்றக்குடி அடிகளார் அவர்கள் இலங்கையின் முக்கிய இடங்களில்சுற்றுப் பிரயாணம் செய்து அருள் நெறிப் பிரசாரம் செய்தார்கள். இலங்கை அருள் நெறித் திருக்கூட்டமென்ற தமது இயக்கத்தையும் ஆரம்பித்து வைத்தார்கள். அத்துடன் மாணவர்கள் இளைஞர்களிடையே அருள் நெறி இயக்கத்தைப் பரப்புவதற்காக இலங்கை இளைஞர் அருள்நெறி மன்றத்தையும் ஆரம்பித்து வைத்துள்ளார்கள்.

குன்றக்குடி அடிகளார் இலங்கையில் போன இடமெலாம் பெரிய வேற்பும் ஆதரவும் காட்டப்பட்டன. மக்களிடையேசோர்வுநீங்கி புதிய உணர்ச்சியும் நம்பிக்கையும் ஏற்பட்டன. இலங்கையில் குன்றக்குடி ஆதீனத்தின் இணைத் திருமடம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை ஆங்காங்கு வலியுறுத்தப்பட்டது. மக்களின் ஏகோபித்த முறையீட்டை அடிகளார் அவர்களும் ஏற்று இலங்கையில் ஒரு இணைத் திருமடத்தை நிறுவத் திருவுள்ளம் கொண்டார்கள்.

அடிகளார் அவர்கள் தாம் சென்ற இடமெலாம் அருள்நெறி இயக்கத்துக்குத் தொண்டாற்ற இளம் ஊழியர்கள் கிடைக்க வேண்டும் என்றும் ஈழநாடு அதற்கு உதவவேண்டும் என்றும் சைவத் தமிழ்ப் பற்றுள்ள ஈழநாடு — நாவலர், ஞானப்பிரகாசர் போன்ற மகான்களைத் தந்த ஈழநாடு—சைவப்பாரிகளை ஆக்குவதற்கும், சைவ சமூக சேவை செய்வதற்கும் வாழ்க்கைத் தியாகம் செய்து பணியாற்றுவதற்குமான தொண்டர்களைத் தரவேண்டும்என்றும் கேட்டுக்கொண்டது எல்லோருக்கும் ஞாபகமிருக்கலாம்.

தவத்திரு அடிகளார் அவர்களது வேண்டுகோளுக்கிசைந்து நீர்வேலி சைவ இளைஞர் சங்கக் காரியதரிசியும் இளைஞருமான எஸ். மூத்ததம்பி என்பவர் (வயது 20) படித்துப் பயிற்சி பெறுவதற்காக இந்தவாரம் குன்றக்குடிக்குப் பிரயாணமாகின்றார் என்ற செய்தி இந்த நாட்டு இளைஞர்களின் உள்ளங்களைத் தட்டி எழுப்பும் எனலாம். இவ்விதமாவாழ்க்கையைத் தியாகஞ்செய்து பணிபுரிய விரும்புவோர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை (நீர்வேலி) அவர்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

—:o:—

3-ம் பக்கத்தொடர்ச்சி

குறைய 6 கோடி மைலுக்கப் பாலிருக்கின்றது.

அடுத்ததபூமி சூரியனுக்கு 9 கோடி 30 இலட்சம் மைலுக்கப்பால் உள்ளது. தன்னையே ஒருமுறை சுற்றிவர 24 மணி நேரமாகின்றது; சூரியனைச் சுற்றிவர 365 நாட்களாகின்றன. சந்திரன் பூமிக்கு உபக்கிரகமாயமைந்து பூமியை முப்பது நாளில் ஒரு முறை சுற்றிவருகிறது.

பூமிக்கு அப்பால் செவ்வாய் கிரகம் சுழலின்றது. செவ்வாயின் குறுக்களவு பூமியின் பாதியளவும் விரிவில் பூமியின் ஏழிலொரு பங்குதானிருக்கிறது. செவ்வாய் சூரியனை வலமவர 687 நாட்களாகின்றன. நமது வருடம் இரண்டு சேர்ந்தது செவ்வாயில் ஒரு வருடம். செவ்வாயைச் சுற்றி இரண்டு உபக்கிரகங்களிருக்கின்றன. ஒன்றன் குறுக்களவு 10 மைல்; மற்றதன் குறுக்களவு 36 மைல்.

செவ்வாய்க்கு அப்பாலிருப்பது வியாழன். இது ஆரம்ப பூமி அளவாய்ப் பாகதது. வியாழன் சூரியனை வலமவர 12 வருடங்களாகின்றன. இதைத்தான் வியாழ வட்டம் என்கிறார்கள். வியாழனைச் சுற்றிவரும் உபகோள்களை நான்கு.

வியாழனுக்கப்பாலிருப்பது சனி. பூமியினும் பத்து மடங்கு சுற்றளவு கொண்டது. பத்து உபக்கிரகங்கள் சூழ வருவது சனி உலகத்தில் $10\frac{1}{4}$ மணி நேரம் ஒரு இரவு பகலாகும். சூரியனிலிருந்து 90 கோடி மைலுக்கப்பாலிருக்கின்றது சனி.

இவை தவிர யுரானஸ் நெப்டியூன், புளூட்டோ என்ற மூனகுறிப்பிடட கோள்களும், எண்ணிலாத எரிமீன்களும், வால் மீனகளும் இருக்கின்றன என்று கண்டுள்ளனர்; மேலும் கண்டுகொண்டே இருக்கின்றனர்.

இது நாம் வாழும் அண்டப் பகுதி. இதுபோன்று எத்தனையோ சூரியர்கள்; சூரியாண்டகள் ஒரு கர்ப்பாண்டத்திலிருந்து தெறித்திருக்கின்றன. அந்தக் கர்ப்பாண்டத்துக்கு தேவ அண்டம் என்ற மேலை காட்டு விஞ்ஞானிகள் பெயர் சூட்டியிருக்கின்றனர்.

ஒவ்வொரு கர்ப்பாண்டத்திலும் நூறு கோடி சூரியர்கள் தோன்றுவதற்கு வேண்டிய சக்தித்திரள இருக்கிறது. அங்ஙனமாக இருபது இலட்ச கர்ப்பாண்டங்கள் மௌண்ட் வில்சன் தொலைவுக்கண்ணாடியில் புலனாகின்றன.

மௌண்ட் வில்சன் கண்ணாடியில் புலனாகும் அண்ட வெளிபோல நூறு கோடி பெருக்கமுள்ளது பேரண்டப் பரப்பு, எனவே, நூறகோடியால் பெருகி, அதை மேலும் இருபது இலட்சதால் பெருக்க, அதாவது இரண்டாயிரம் கோடி கோடி சூரியர்களாவது குறைந்தது பேரண்ட வெளியில் மிதக்கின்றார்கள.

அந்தப் பேரண்ட வெளியின பரப்பே எண்ணுதற கெட்டா எலலையாயிருகக நாம். பூமியைசுற்றிவர ஒரு சூரியனை ஒளிக்கதிருக்கு வழி லொரு செக்கண்டு தேவையாகிறது; அண்டத்தைச் சுற்றி வரப் பத்தாயிரம் கோடிவருடங்களாகின்றன கிளைக்க முடியவில்லை; சிதனை தேங்குகின்றது. தலையகுகுகின்றது.

பரந்த கடற்கரையின ஒரு துண் மணலையொக்கும் நமது மாபெரும் சூரியகோளமென்றால் பூமி எத்தனை சிறியது! அதனிலும் எத்தனை எத்தனைச் சிறியோம் நாம!! அணுவைப் பலகோடி பல கோடியாகப் பகுப்பினும நாம ஆடிப்போமா?

இதனலன்றே உலகம் யாவையும் தாமுளவாக்கலும்" என்ற தொடங்கினர் கபர். உலகெலாம உணர்ந்து ஓதற் கரியவன்" எனறு அடியெடுத் தருளப் பாடினர் சேக்கிழார் விரிக்க முயன்ற வள்ளலாரும்.

உலகுபல் கோடி கோடிகள
இடங்கொள
உலப்பிலா அண்டதின்
பகுதி
அலகுகாண் பரிய பெரிய
கூட்டத்த
அவையெலாம் புறததொரு
சார்பில
விலகுரு அணுவில் கோடி
பில ஒருகூற்ற
இருந்தென இருந்தன
[மிடைந்தே
இலகுபொற் பொதுவில்
[கடம்புரிகருணை
இணைபடிச் சமுகத் தோரி
[டத்தே

என்று பாடினர்.

இவ்வனமாக வியந்த இக்கப் பேரண்டதைப்பற்றி இனறைய விஞ்ஞானிகள் என்ன கருதுகிறார்கள? "நாமிருக்கும் உலகம் ஒரு சிழல் பரப்புப் போன்றே தோன்றுகிறது. சிழலைக் கடந்த சில உருவத்தக்கு விஞ்ஞானம் சமமை எடுத்துச்செலவ தரமில்லை. அது சிழல்களையே மீண்டும் மீண்டும் நுணுகி ஆராய்ந்த வண்ணமாக இருக்கின்றது" என்கிறார் ஸர். ஜேம்ஸ் ஜீன் என்னும் பெருமேதை.

இந்த உலகதைதத் தோற்றுவித்த ஒரு சிருஷ்டி கர்தத உண்டோ? அலலது தானாகத தோன்றியதா? அனுமானப் பிரமாணத்தாலேயே இதற்கு விடைபகர முடியும். எவ்வளவு பெரிய விஞ்ஞானிக்கும ஸர். ஜேம்ஸ். ஜீனும் அவ்வாறே விடையிறுக்கிறார்.

அண்டம் தோன்றிய நிலையில் இன்றில்லை. நாளும் கழிந்துகொண்டே இருக்கின்றது. சாவி கொடுத்து வைதத கடிகாரம் மெல்ல மெல்லத் தன் முறுக்கு இழப்பதுபோலிருக்கிறது. கனமிகுந்த அணுக்கள் கதிரெறிந்த கதிரெறிந்த சக்தி பிழந்து கனம் குறைந்த அணுக்களாகின்றன. அங்ஙனம் எரிந்துபட்ட அணுத திரளின் குளிரந்த சமபலேமே பூமண்டலம். கட்சதிரங்களின் கடுவனே அனைக்கரிய பெருவெப்பம குடிகொண்டிருகிறது. அதைப் பெருவெபமையைத் தாங்காத புரோட்டான், எலக்ட்ரான எனற சொல்லப்பெறும நுண அணுப்பகுதிகளெலலாம் சாய பரகின்றன. இது எங்குமெப்பொழுதும் நீக்கமற நடகதேற்கொணடிருகக்றது. கதிர்விட்டன சாமபரணுதேயே கண்டல அல்லாது, அவை பரானதலை மீண்டு கதிர்விட்டனமையைக் காணும். இங்ஙனமே பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறாண்டு கழிதை யிலே, போண்டதன் கதி என்னவது? கதிரொளி அனைத்த, விண்மீனொளி அனைத்த ஆனடம் கூனைத்தும் தேயத்து தேய்த்து தணணிய சக்தி வடிவாய் பரக்க மாறும.

எனவே, சதத சங்காரமே உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சகதி கதர் விட்டுக் கழிந்த படர்ந்த கொண்டேயிருக்கின்றது. ஆங்காருயின, ஆதியில் சக்தியைத் திரளவைத்த தெறி யொன்று இருந்ததானபாக வேண்டும. தண்ணீர்ப்பாத்தி ரதகில் துளிமை படர்த்து விரிகின்றது மைத்துளி படரு முன அதனைக் குலுக்கிய ஒரு செயல் வேண்டாவோ? குலுக்கியவர் ஒருவர் வேண்டானோர் அதேபோனற ஆதியில சக்தி பினைத திரளுருவாய்க் கூட்டிய ஒரு செயலும உண்டு; அது தான் படைப்பு. கூட்டியவர் ஒருவர் உண்டு; அவர்தான் கடவுள்.

ஸ்வாறு சோக்கினுமே காலகலையின ஒரு சட்டததில, படைப்பு என ஒரு தொழில் கிகழ்ந்திருக்க வேண்டும். உலகுக குருட்டுப்பாக இது தானாக உண்டாகியத என்று கருதுவதற்கேயிலலை; ஆல்லது எனறுமே இருகியில் இருந்ததெனறும் சொலவதற்கில்லை" என்று ஸர் ஜேம்ஸ் ஜீன் முடிவுகட்டுகிறார்."

ஆனமான அளவிறை லேயே,

"அனைவரது லெனுமை
ஆனினையிற்
றோனறியநிநிடேயொடுகி
மலதுளதா

தொடர்ச்சி 6-ம் பக்கம்

அடைவு நகை
ஏல விற்பனவு

பருத்தித்துறை தும்பளை வடலிப் பாதியிலிருக்கும் அடைவு பிடிக்கும் ஸ்ரீமதி நாகப்பர் வினாசித்தம்பி & வினாசித்தம்பி சிவசுப்பிரமணியம் அவர்களிடம் 1952-ம் ஆண்டு ஆடி மாதம் 7-ந் திகதி தொடக்கம் 1953-ம் ஆண்டு மார்கழி மாதம முடியுமவரையுமுள்ளதம் 1952-ம் ஆண்டு ஆடி மாதம 1-ம திகதி தொடக்கம 1953-ம் ஆண்டு மார்கழி மாதம் முடியும வரையுமுள்ள மீளாத நகைகள் யாவும் 1956-ம் ஆண்டு மாசி மாதம் 26-ந் தேதி ஞாயிறுதகிழமை பிறபகல 2 மணி தொடக்கம மேற்படியார் கடையிலிருந்த எனனல் பிரித்தரவத நில விற்கப்படும்.

க. முத்துக்குமாரு ஐயர்
வெற்றிஸ் மேஸ்தர
சுக்கிதிவேல
பருதத்தித்துறை
18-1-56
M 219 27-1, 3-2

திரு. எ. தியாகராசாவின் கேள்வி

(அவர் விடுத்த பத்திரத்தின் ஓர் பகுதி)

தமிழ் பேசும் மக்கள் விரைந்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. தமிழ்த் தலைவர்களும் மக்களும் திகைத்துத் தடுமாறிப் பல பரிகாரங்களையும் தேடிப் பார்க்கின்றனர். ஆனல் எங்கள் விதியும் விதியும் எமமை எங்கேயோ உந்திகொண்டு போகின்றன வருங்காலமே அவற்றின் பலாபலன்களைக் காட்டும். எனினும் தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்டு ஒரு தீர்மானஞ் செய்து எமக்கு வேண்டியதை உருவாக்க வேண்டும. எவ்வளவுக்கெவ்வளவு நிரந்தர பரிகாரம் தேடுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நாங்கள் பகிரதப் பிரயத்தனம் செய்ய ஆயத்தமாக இருத்தல் வேண்டும. போலி வாதாட்டம் செய்வோர் போலிப்பரிகாரமே தேடுவர். அது எமக்கு உதவாமல் போய்விடும். நாம கேட்பதைச் சிங்களவர் கொடுப்பார்கள் என்ற எண்ணுவதைக் கைவிட வேண்டும. பிறரும உதவிக்கு வருவார். எங்கள விடுதலை எமவசமதான் உண்டு. இதற்கு ஒற்றுமையும உழைப்பும அவசியம. கஷ்டங்கள பல வந்தபோதிலும அயற்றைப் பொருட்படுத்தாது தமிழ்சசாகித்தியம் முனனேற எதனிக்கவேண்டும.

பாராளுமன்றத்தில் தமிழர் மூனறில் ஒரு பங்கு ஸ்தானமேனும இலலாதவர்கள; மூனறுக்கு இரு பகுதிற்குமேல சிங்களவர். வாக்கெடுப்பில் (என். எல் எஸ். எஸ். பி. சி. பி) அங்கத்தவர்களைத் தவிர மற்றெல்லோரும் சிங்களவர்களே. இவர்களைக் கொண்டுகொண்டுதான் தமிழர் சிலர் பாதிக்கப்படும் ஓர் ஆட்சிக்குள் உள்ளகாம் தமிழரின் பிரதேசம் கூடியதாக இருக்க இவ்விரண்டும்தான் தமிழப் பிரதேசம் என்று ஒத்துக் கொளக்கூடாது. தமிழப் பிரதேசம் சிங்களப் பிரதேசம் என்று ஒரு ஆராய்ச்சிச்சபைதான் (கமிஷன்) தீர்க்கலாம். மாகாணமுறை மாகப்போவதைத் தமிழர் ஒத்துக்கொள்ளார். அவ்வாறயின் சமஷ்டிக் கட்சி எவ்வாறு அதைப்பெறும்? எவ்வாறு போராடும்? 2. சமஷ்டியில தமிழப் பிரதேசத்தின் பொருளாதாரம் யாது. கைத்தொழிலுக்கும் கமத்திறகும் மின்சாரம நீர்ப்பாய்ச்சல் எங்கிருந்து வரும்? மலைப்பிரதேசத்தில ஒரு பகுதி தேவையிலலையா? வருவாய்த்தொகை செலவுத் தொகை எவ்வளவு இருக்கும்? பிரதான வருவாய்கள எவை? அபிவிருத்திக்குக கடன் எங்குவாங்கலாம்? மதிய அரசாங்கம் அநுசாபம காட்டுமா? பட்சபாதமில்லாமல தமிழப்பிரதேசத்தின் வளர்சிக்கு சில சிங்களவர் அதிகப்பட்ட மதிய அரசாங்கம ஒத்துழைகாட்டினால .....
....?

சம்பூர் சமத்துவ சமஷ்டி

சிங்கள காட்டோடு சம்பூர் சமத்துவமுள்ள சமஷ்டி அரசாங்கம அமைப்பதத இப்பொழுதுள்ள நிலைமையில சிறததாகுமென்று பாராளுமன்றத் தமிழ அங்கததவர்கள் தீர்மானித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 29—1—56 —— 4—2—56

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உம்முடைய சொந்தக் கருமங்களில் இந்தவாரம் சில திருத்தங்களுண்டாகும். சித்தி படிப்படியாகத் தான் வரும், ஆனல் நீர் உம்முடைய முயற்சிகளே முன்னேற்றலாம். போட்டியிடுவோரை வெல்லுவது நிச்சயம்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்பச் சூழலில் இந்தவாரம் பிழை எண்ணங்கள் அடிக்கடி உண்டாகும். தேகசுகம் சிறிது நல்லாயிருக்கமாட்டாது. உம்முடைய சொந்தக் காரியங்களிலும் நடைமுறை அலுவல்களிலும் விரும்பக்கூடாதமாற்றங்களுக்கிடமுண்டு.

மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

தொடக்கத்தில் இடையூறுகள் முன்னிட்டாலும் இந்தவாரம் உம்முடைய முயற்சிகளில் நீர் சித்தி பெறுதல் நிச்சயம். பணநிலைமைகள் திருந்தவேண்டும். ஆனல் மனச்சமாதானம் சிறிதமிருக்கமாட்டாது.

கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

விசேடகருமங்களில் நிர்மானஞ் செய்வதில் நீர் வருத்தப்படுவீர். வேலை அதிகமாயிருக்கும். அதிக கண்டனங்களோ நீர் முனனிடவேண்டிவரும் ஆனல் உம்முடைய உத்தியோகாரியங்களில் சித்தி நிச்சயம்.

சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

உம்முடைய பதக்கருமங்களில் இந்தவாரம் நீர் சித்திபெறக்கூடியதாயிருக்கும், எதிரிகளுக்கு அழிவும் மற்றவர்களின் நல்லெண்ணமும் நிச்சயம். வார இறுதியில் அபாயத்தைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்தவாரம் நீர் மிகுந்த இன்பம் அனுபவிக்கக்கூடியதாயிருப்பதோடு எதுவோ ஒன்றால் தன்பப்படவும் வேண்டிவரும். பொதுவாகச் சித்தி நிச்சயம் ஆனல் சில அவமானங்களுக்கு நீர் ஆளாவதற்கு இடமிருக்கிறது.

துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம்1,2,3ம் பாதம்

இந்தவாரம் வரவுசெலவு சமாளிப்பதில் நீர் வருத்தப்படுவீர் புதுமுயற்சிகள் கவனமாய்க் கையாளப்படவேண்டும். இரகசியப்பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும், ஆனல் நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

உமக்கு நெருங்கியவர்கள் அன்பானவர்களிடமிருந்து இந்தவாரம் நீர் பிரியவேண்டிவரும். பிழை எண்ணங்களோ நீக்குவதில் வருத்தப்படுவீர். பணநிலைமைகளும் நல்லாயிருக்கமாட்டா.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்

ஒரு குற்றமில்லாதவாரம். உமக்கு உண்டாக்கப்படும் இடைஞ்சல்களுட் பலவற்றை நீக்குவது உமக்கு இலகுவாயிருக்கும். செலவதிகரிக்கும். ஆனல் நீர் செலவழிப்பவர்களிடமிருந்து போதிய இன்பத்தைப் பெறுவீர்.

மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

வாரத்தின் முதல் இருநாட்கள் உம்மைச் சில இடைஞ்சல்களுக்குள்ளாக்கக்கூடும். ஆனல் வாரமிகுதி மிகநல்லாயிருக்கும். புதுமுயற்சிகள் ஒரு அளவுக்குக் குற்றமில்லாத பலனைத் தரும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

உத்தியோக கருமங்களுக்கோ வியாபாரகருமங்களுக்கோ முதல் இரு நாட்களும் நல்லாயிருக்கும். செவ்வாயும் புதனும் தொந்தரவானவையாகும். ஆனல் சுபகாலமாயிருக்கும். வாரமிகுதி திரும்பவும் உன்னுக்கும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

முன் அரைவாரம் பின் அரைவாரத்திலும் நல்லாயிருக்கும். உம்முடைய முயற்சிகளில் நீர் கவனமாயிருக்கவேண்டும் தன்பங்கள் அதிகரிக்கும். இரகசியப் பகைவரைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

வண் வட கிழக்கு சனசமூக நிலையம்

21-1-56 ல் கடந்த மேற்படி நிலையத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

போஷகர் திரு. எஸ். எஸ். வரத்தினம் (மாகாண சபைத் தலைவர் யாழ்ப்பாணம்) தலைவர் திரு. ஆ. கனகரத்தினம், உப தலைவர்கள் திரு. சி. கணபதிப் பிள்ளை, திரு. ஆ. முத்துக்குமாரசாமி, காரியதரிசி செல்வன் மு. யோகேந்திரன், உப காரியதரிசி செல்வன் த. நில்லாசா, இணைத் தணிகாரிகள் திரு. எ. இனனப்பா, திரு. த. பாலச்சந்திரன், நூல்நிலைய நிர்வாகஸ்தர் செல்வன் த. விக்கினராசா, கணக்குப் பரிசோதகர் திரு. பி. தம்பு.

நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திரு. மு. கார்த்திகேசன் எம். எம். சி., முகாந்திரம் இ. பொ. இராசையா, திரு. வீ. சுப்பிரமணியர், திரு. எ. எஸ். முத்தையர், செல்வன் க. ஆனந்த நடராசா, செல்வன் இ. சகாதேவன், செல்வன் வீ. கணேசலிங்கம், செல்வன் இ. செகேந்திரன், செல்வன் எஸ். இராமலிங்கம்.

ஐக்கியமற்றது ஐ. தே. கட்சி

அமைச்சர் ஸ்ரீ சு நடேசன் அவர்கள் தமது மந்திரி பதவியை நீத்துவிட்டார். ஏனைய அங்கத்தவர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் நீங்கிவிட்டார். திருவாளர்கள் எஸ். எம். இராசமாணிக்கம், எம். இ. எச். முகமது அலி, வி. குமாரசாமி, ஏ. எம். மேர்சா, ஏ. எல். தம்பிஐயா, ஆர். பி. கதிர்காமர் ஆகியோர் ஸ்ரீ நடேசன் அவர்களுடன் ஐ. தே. கட்சியை விட்டு நீங்கினர்கள். மேற்சபை அங்கத்தவர் திரு. எஸ். ஆர். கனகரத்தினம் அவர்களும் ஐ. தே. கட்சியைவிட்டு நீங்கிவிட்டார். ஏனையோரும் இக்கட்சியை விட்டு நீங்குவார்களென்று கருதப்படுகின்றது. ஆனல் திருவாளர் வி. வீரசிங்கம ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு நீங்கமாட்டா ரென்றும் கூறப்படுகின்றது. சேர். கந்தையா வைத்தியநாதன் ஐ. தே. கட்சி அங்கத்தவரா யிராதபடியால் தமது தீர்மானத்தைத் தனிப்பட்ட முறையிற் செய்வாராம்.

அனிந்துரை அரங்கம்

விவேகானந்த வெளியீடுகள்

பொருத்தமான திருக்குறட் பாக்களுடன் பொது வாழ்க்கையில் வேண்டப்படும் பல குறிப்புகளடங்கியதாய் விவேகானந்த அச்சகத்தார் வெளியிட்ட திகதி வெளியீடும், குறிப்புக் கைப்புத்தகமும் வரப்பெற்றோம். அவை வழக்கம்போல் சிறப்புற அமைந்திருக்கின்றன.

தமிழ் நிலைமைக்குப் பஞ்சாயத்து

பல்வேறு கட்சிகளிலுள்ள தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஒருமுகமாய்ச் சுயஉரிமை இயக்கத்தை நடத்துதல் சாத்தியமாகும் பொருட்டு ஆலோசனைக் கூட்டங்கள் ஒழுங்குபண்ணப்படுகின்றன. திரு. ஏ. எல். தம்பிஐயா இத்துறையில் உழைகின்றார். அரசியலில் ஈடுபடாத பெருமக்கள் அங்கத்தினரான ஒரு பஞ்சாயத்து அமைக்கும் முயற்சியும் நடக்கின்றதாம். இதுபற்றி நீதிபதி ஸ்ரீ சி. காகலிங்கம், சேர். அ. மகாதேவா, ஸ்ரீ ஏ. வி. குலசிங்கம், ஸ்ரீ எஸ். வி. ஓ. சோமசுந்தர், ஸ்ரீ இபு ராகிம் ஹாஜியார் (மிருக்கு மாகாணம்) ஆகியோரு டைய கருத்து அறியும் முயற்சிகளும் நடக்கின்றனவாம்.

எங்கள் பிரதிநிதிகள் செயலில் சந்தேகமுண்டா?

ஐக்கிய தேசியக் கட்சியின செல்வாக்குக் குறைவதால் அக்கட்சி அபேட்சகர்களாய் நின்று வெற்றி பெற முடியாதாகையால் வடக்கு மிழக்கு மாகாணங்களில் வெற்றி பெறும் பொருட்டே தமிழ்ப் பிரதிநிதிகள் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கியதும் பதவிகளிலிருந்து நீக்கியதும எனவும், தேர்தலில் வெற்றிபெற்றபின் இவர்கள் திரும்பவும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்வார்களென்றும் ஸ்ரீ டபிள்யு தகநாயக கூறினராம்

நேயர்கள் நெஞ்சம்

சுயராச்சியதினக் கொண்டாட்டத்தை தமிழ்பேசும் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும்

வரும் மாசி (பெப்ருவரி) மாசம் 4-ம் திகதி இலங்கைக்கு ஆங்கிலேயர்கள் சுயராச்சியம் வழங்கினரன். இலங்கைக்குச் சுயராச்சியம் என்றல் இலங்கையிலுள்ள எல்லா மக்கட்கும் சுயராச்சியமாகும்: சிங்களவர்கட்கு மாத்திரமல்ல சிங்களவர்கள் இலங்கை தங்கட்கு மாத்திரமே என்று எண்ணுகிறார்கள். இலங்கைவாழ் தமிழர்களின பிறப்புரிமைகளையும், மொழியையும சமயத்தையும் இல்லாதொழிப்பதுடன், எத்தனையோ காலமாக பரம்பரையாய், இந்தியாவிலிருந்து வந்து, இலங்கையில் குடியேறி, இலங்கையைக் குபேர நாடாக்கிய, எம் இந்தியச் சகோதரர்களை நாட்டைவிட்டோட்டுகின்றார்கள். இலங்கையும் இந்தியாவும் இடங்கொடாத மக்கள், கணக்கிலடங்காத இலங்கைவாழ் இந்திய மக்கள் அல்லோலகல்லோலப்படுகிறார்கள். பிறப்புரிமை உள்ள மக்கட்கு, இவ்விதம் பெரும் பாண்மையான சிங்களவர்கள் செய்யும் கொடுமை போல, உலகில் வேறொரு தேசத்திலும் செய்ததுமில்லை, செய்யுமில்லை. பாம்பின் வாயிற் சிக்கிய தேரைபோல, பதை பதைத்து நிற்கின்றோம் தமிழ் பேசும் மக்களான நாங்கள். அரக்கர்கள், அசுரர்கள்தானும் இவ்விதம்செய்யத் துணிந்ததில்லை. பூதர்கள் பிறந்தநாடாகிய ஜேர்மனிக்குக் கேடுசெய்தார்கள் என்றுதான் கிட்லர் அதிகாரத்துக்கு வந்தபின் யூதர்களை, ஜேர்மனியை விட்டுத் துரத்தினர். நாட்டை நல்ல செல்வ நாடாகிய இந்திய மக்களை விரட்டிக் கலைப்பதுடன், பிறப்புரிமையுள்ள இலங்கைத் தமிழர்களையும், அவர்களின மொழியையும் சமயத்தையும், இல்லாதொழித்து அடிமைகளாக்க வேலை செய்கிறார்கள். சுயமரியாதையுள்ள ஒவ்வொரு தமிழனும், சிங்களவரின் எண்ணத்திற்கு இடங்கொடாமல், உற்சாகமாக எழுந்து, உரிமைபெற, போராட வேண்டும். மகாபாரதத்தில் சொன்ன விதம்போல "மானமிலாதிவன் குடைக்கீழ் வாழ்தலிலும் சாதல் நன்றே" என்றபடி உயிர் விடுதல் நன்றே. அன்னியதேசத்திலிருந்து வந்து இலங்கையை ஆண்ட போர்த்துகேயர், ஒலலாந்தர், ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற நாம சிங்களவர்கட்கு அடிமையாயிருக்கவா? "நாம் ஆர்க்கும் குடி அல்லோம்" என்றதை மறவாமல், சிங்களவரை விட்டுப் பிரிந்த "தமிழ் நாட்டைப் பெற்று சுயராச்சியம், தமிழ் பேசும் மக்கள் நடத்த வேண்டும். மாசி (பெப்ருவரி) 4-ந் திகதிக் கொண்டாட்டத்தில், தமிழ் பேசும் மக்கள் பங்கு பற்றாது அதைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

ந. சேனாதிராசா

யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரி
சுழிபுரம்
20-1-56

26—1—56

பாரதக் குடியரசு

6.வது ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
கரையூர் யாழ்ப்பாணம்
காத்தி ஆறமுகம்
இல 11146
வழக்காளி
எதிராக
கரையூர் யாழ்ப்பாணம் சந்தியாப் பிள்ளை மனுவேற்பிள்ளை
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11146-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு தண்டுக்காணி 1956-ம் ஆவணி மீ 7-ம் ஞ செவ்வாய்க்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த எலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 2025 ம் ரூபா 1500 க்கு 19-5-54 தொடக்கம் 30-11-54 வரை 10 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 167-41 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று காம்பனிறை "கலட்டிக் காடும் கலட்டிக் காடு செய்கையும்" பர. கெ இல (15) பதினைந்து பனைகளும், மற்றும் பயிர் வகைகளும் அதற்குரிய வைகளும் எல்லை கிழக்கு மரியாம் பிள்ளை பெண் மரியாச்சிக்கும், பகாளருக்கும், கணபதிப்பிள்ளை பொன்னையாவிற்கும் சந்தப்பு பெண் சந்தாம்மாவிற்கும் உரிய ஆதனங்கள், வடக்கு சந்தியாபிள்ளை பெண் ரெஜினா திரேசம்மாவிற்குரியவாதனம், மேற்கு மத்தேசப்பிள்ளை அந்தோனிப்பிள்ளைக்கும் சந்தியாப்பிள்ளை குரைப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள் தெற்கு வேலாயுதர் தம்பி முத்துவுக்கும் சகோதர சகோதரிகட்குமுரியவாதனங்கள்.
1955-ஆவது மார்கழி மீ 19-ந் திகதி

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
M. 220 27-1-56 (தி. 100))

கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் நாரந்தனை முத்து மருதையினர் — வழக்காளி
எதிராக
இல 11371
1 ஊர்காவற்றுறை சரவணை விசுவநாதர் வேலுப்பிள்ளை கைம பெண் செய்வாணைப்பிள்ளை
2 ஷையூர் ஐயம்பிள்ளை சுப்பிரமணியம். எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11371ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு தண்டுக்காணி 1956-ம் ஆவணி மாதம 11-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த எலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 426-60-ம் ரூபா 300 க்கு 8-7-1954 தொடக்கம் 28-9-54 வரை 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 144-15 சதம், தீர்வைத்தொகையில் ரூபா 100-ம் கோட்டுச் செலவில் ரூபா 50-ம் கொடுபட்டது.

காணி விபரம்

வடமராகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணை பிறை "வழுக்கற்புலம் தெற்கிலடப்பு' இருபிரிவுகளாய் நி. பர 20 3/8 ம் பனைகளும் எல்லை கிழக்கு நடராசா பெண் இராசலெட்சுமிக்கும் கணபதிப்பிள்ளை நாகலிங்கத்திற்கும் உரிய ஆதனம் வடக்கு கணபதிப்பிள்ளை நாகலிங்கத்திற்கும் கனகசபை கைம்பெண் தங்கம்மாலின் உரிமைக்காரருக்குமுரிய ஆதனம், மேற்குஒழுங்கை, தெற்கு நடராசா பெண் இராசலெட்சுமிக்குரிய ஆதனம் இதடங்கலிற் சொரியலா யாவரி. ஆனல் ஆட்சி தெறகுப் பக்கமாகவும் நிந்தமானவீடும்
1955ஆவது மார்கழி மீ 19-ந் திகதி

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
M 221 27-1-56 (தி 300)

கோட்டு விற்பனவு விளம்பரம்

பொன்னையா ஐயாத்துரையும் பெண் சரஸ்வதியும் கொய்யாத் தோட்டம் புதுரோட்டு
வழக்காளிகள்
இல M B 157
எதிராக
M யோசேப்பு அல்லது பிரான்சிஸ் யோசேப்பு பெண் மோகம்மாநகலூர்.
எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M B 157 ம் இலக்க வழக்கினைனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல விபரிக்கப்படும் ஒரு தண்டுக்காணி 1956-ம் வருசம் பங்குனி மாதம 9-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த எலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

யாழ்ப்பாணம் நல்லூரில் வல்லன் தோட்டம் எனனும் காணி எறக்குறைய நி இ 10 மற்றும் அதற்கு சேர்ந்தவைகளும்.
எல்லை கிழக்கு முத்தையா குணசேகரம்.
வடக்கு பஞ்சப்பா களவு என்னும் காணி
மேற்கு ஒழுங்கை
தெற்கு சபாபதி பெண் அன்னப் பிள்ளை
இவை அடங்கலிலும்சொரியலாக 1/3 பங்கு.

வ. அ. துரையப்பா
கொம்மிஷனர்
யாழ்ப்பாணம்
23-1-56
M 223 27-1 (தி. 100)

அங்கிரி ஒருங்கு சேர்ந்து அகத்தில் பிரிந்துவிடல்

வதற்கு ஆற்றல் தேடுவதன்றிப் பிறிதொன்றல்ல.

ஆனல் இந்த எதிர்ப்பு இயக்கத்திலே கலந்து கொள்வதற்கு இதயத்தில் அணி பிலாதவர்கள் எவ்வகையிலும் ஒற்றுமைமுன்னணி அமைக்கப் படாத வகையிலே வேற்றுமை விளைவிக்கப் பெரிதும் முயலுகின்றார்கள்.

நங்கள மக்களுக்கு ஒரு சேர் ஒலிவர் இருந்து இராச தந்திரஞ் செய்தார். அதபோலத் தமிழகத்திலும ஒருவர் தோன்றியிருக்கின்றார் அன்னர் போசனையிலேயே எல்லாத நிட்டங்களும எழுமபினஎன்ற அவர்ரபரிங்கமாகக் கூறுகின்றார். தானே சிருஷ்டிக்கின்றார், காத்தறெழில புரியாத தானே அழிததல் அறுவலையும செய்து விடுகின்றார் இனறைகுக்கூட்டாட்சி நாளைக்குத் தமிழநாடு, அடுதத நாள் உரிமை வேண்டுகோள் பின்னர் இலலென்று!

இரகசியம் என்னவென்றல் சத்தியாக்கிரகப போராட்டத்திற்கு, நாற்காலியில் இருந்து வாய்ச் சொன்னாலும் எதிராக இருக்கின்றார்கள் என்பதுவே.

கோட்டு விற்பனவு விளம்பரம்
—o—

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
வேலணை மேற்கு செல்லையா சோர்ணலிங்கம் வழக்காளி,
எதிராக
இல. 11965
1. வேலணை மேற்கு சதாசிவம் பிள்ளை சபாரெத்தினம்
2. ஷையூர் பெண் இலட்சுமிப பிள்ளை
3. ஷையூர் இளைய தம்பி
4. காமபன் கினைத்தம்பி இளைய தமபி
5 ஷையூர் C வயித்தியநாதர் விசுவலிங்கம
6. ஷையூர் கந்தையா சுகசப் பிள்ளை
7. ஷையூர் கந்தையா செகதி தமை
8. ஷையூர் வேலமுருகர் சிவலிங்கபிள்ளை
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின 11965ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுகட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு தண்டுக் காணி 1956 ஆவது பங்குனி மீ 6 ஞ செவ்வாய்க்கிழமை முற்பகல் ஒன்பது மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த எலத்தில் விறகப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 1396/50ம ரூபா 100/= கு 24-11-1954 தொடக்கம 29-9-55 வரையும் 15 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறக்குவரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 250 – 43 சதம்.

காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை "தென்னிலகன் கலடி" பர கெ இல ஒன்பதரை (பர. கெ. இல 9½) கிணறும் எல்லை கிழக்கு இராமனாதர் மருதையினருடைய ஆதனம். வடக்கு முடிக்குரிய ஆதனம். மேற்கு ஏரம்பு நடேசபிள்ளைக்குரிய வாதனம். தெற்கு றோட்டு. இதடங்கலும் ஆனல் சொல்லப்பட்ட கிணறறிலிருந்து மேற்கெல்லையிலிருக்கும் நடேசபிள்ளையின் காணிக்குப் போகும் தண்ணீர்ப் பகுதியும் அக் கிணறறிலிருந்து வடக்கெல்லையருகாகப்போகும் வழிப்பாவியபுரித்திம பிறதீகலாக

இக்காணி முன்னல் ரூபா 3000/— க்கும் வட்டிக்கும் வைக்கப்பட்ட இரு ஈட்டுக்கும் அமைவாக விற்கப்படும்.
1956ஆவது மைமீ 17ம் திகதி

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.
M 222 27-1-56 (தி 300)

ஹரிசன மாணவர் நிதி உதவி

சென்ற இந்துசாதன இதழில வெளிவந்த நிதியுதவி பெறும ஹரிசன மாணவர் நிதியில வெறறிலவு இராசபணையாபாரிமூலனை பெயருக்குப் பதிலாய சரவணை செலவராணி சீரணி சண்டிலிப்பாய் என வாசிக்கும்படி கொக்குவில் மகாத்மா காந்தி ஹரிசன மாணவர்நிதி உதவிச் சபைகாரியதரிசி தெரிவிக்கின்றார்.

அழித்து ஒழிக்கப்படுகின்றது ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் நம் கண்ணை மறைத்து விடக்கூடாது. பூச்சாண்டிகளுக்கு அணுவளவும் நாம் அசைந்து கொடுத்து விடக் கூடாது. இலங்கையிலுள்ள ஒவ்வொரு தமிழருக்கும நாம் சமாதானத்தை வேண்டுகிறோம். கௌரவத்தை நாடுகிறோம்; சுமுகமியாரை விரும்புகிறோம். எவ்வளவு எளிய தமிழனும மானமரியாதையோடு வாழ வேண்டுமென்றே கேட்கிறோம். இது நம்மில ஒருசிலருக்குமட்டுமே ஏறபட்டால போதாது. தமிழ பேசும இனம முழுவதற்கும ஏறபடவேண்டும.

நமது இலட்சியத்தை எப்படி அடைவது என்ற கேள்வி அடுத்தபடியாக எற்படுகிறது. பலாத்காரத்தை நாம் அறவே வெறுக்க வேண்டும். நமது போராட்டம் சகல விதத்திலும் அஹிம்சையை அடிப்படையாகக்கொண்டதாயிருக்க வேண்டும். நாம் வாழ்ந்தாலும், வீழ்ந்தாலும் ஒன்றுக சிற்போம் இறைவன் அருளுடன் நாம் நமது இலட்சியத்தில் நிச்சயம் வெற்றிபெறுவோம். எனெனில் நமது கட்சி நியாயமானது. நியாயமும், தர்மமும் நிச்சயம் வெற்றி பெறறே தீரும்"

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(4.ம் பக்கத்தொடர்ச்சி)

மந்தமாதி யென்மனர் புலவர்"

என்ற மெய்கண்ட தேவர் முதற் சூத்திரம் அருளிச்செய்தார். உலகு படைக்கப் பட்டது. படைத்தவன ஒருவன் வேண்டும். சங்காரகாரணனே படைத்தவனும், என்றார்.

அணுமான ஆளவையினலேயே இன்ற ஸர். ஜேம்ஸ் ஜீன் அதற்கு விஞ்ஞான ஆதாரமும தேடித தந்தார்.

வான்கெட்டு மாருத மாய்க்ன
அழல்நீர் மணகெடினும
தான்கெட்டலின்றிச சலிபபறி
யாத்தன மையனுகு
ஊனகெட்டு உயிர்கெடடு உண
[ர்வு
கெட்டு என்னுள்ளமும
[போய்
நான்கெட்ட வாபாடித தொள
ளேனை கெட்டாமோ.

(திருவாசகம்)

— தமிழ்நாடு

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்ற 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொனறுக்கு ரூபா 100 திருப்பிகொடுக்கப்படும். பங்குகள் எத்தனையும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

[எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட தேஷமப் பணம்.

தேஷமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இத்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ள வர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

சுகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்முலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை.
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேனமைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Friday Jan, 27, 1956

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org